Koviloor Digital Library

ஸ்ரீ ஞான சரஸ்வதி

மாத்தூர் அருள்மிகு பெரியநாயகி அம்மன் உடனுறை
ஐந்நூற்றீஸ்வரர் திருக்கோயில்,
மாத்தூர், இலுப்பக்குடி அஞ்சல் – 630202
☎ விடுதி : 04565 231862 செல்போன் : 7598365271



ACC No 32185
Q25 33

அன்புடன்
S. சுப்புசுந்தரம் - அன்னம் அசோசியேட்ஸ், சென்னை – 600003

Koviloor Digital Library

க் கவிஞர் சித.சிதம்பர
தொலை நோக்குப் பார்வையில் ...
பாரோர் படித்துப் பயனுற வழங்குவோர்
மு.சித. இல்லம் முத்துப்பட்டிணம், கா

க் கவிஞர் சித.
தொலை நோ
பாரோர் ப
மு.சித. இ
ரைக்கு

Koviloor Digital Library





ஸ்ரீ ஞான சரஸ்வதி கோயில்களின் வரலாறு

11 -வது நூற்றாண்டில் கி.பி. 1162 வருடத்தில் கங்கை கொண்ட சோழபுரத்தில் முதலாம் ராஜேந்திர சோழன் கொள்ளிடத்தில் உள்ள லோயர் அணைக் கட்டுக்கு ஐந்து மைல் தூரத்தில் கலையுலகின் கலைப் பொக்கிஷங்களில் ஒன்றான பழந்தமிழ் நாகரிகப் பெருமையும், கலைமாட்சியும் கொண்ட "கங்கை கொண்ட சோழேஸ்வரம்" என்ற சிவன் கோயிலைக் கட்டினான்.

கோயில் மகா மண்டபத்தின் வடக்கு வாசற்படிக் கட்டின் எதிரே சின்முத்திரை தாங்கிய கையும், மற்ற கைகளில் ஜப மாலையும் அமிர்த கலசமும், சுவடியும் கொண்டு பத்ம பீடத்தில் அமர்ந்துள்ள மகா ஞான சரஸ்வதியைக் காணலாம். கிட்டத்தட்ட 1000 வருடங் களுக்கு முன் ஞான சரஸ்வதி சன்னதியை இந்து சமய கடவுள்களின் புராணத்தின்படி முதலில் தோற்றுவித்த பெருமை இம் மன்னனையும், கோயில்களில் முதலில் ஞான சரஸ்வதியை பிரத்திஷ்டை செய்யப்பட்ட சிறப்பும் இக் கோயிலைச் சாரும். சோழர் ஆட்சியின் ஆதிக்கம் குறைந்து மறைந்த பொழுது யாரும் எப்படி ஏற்பட்டது என்று விவரிக்க இயலாத வகையில் முதன் முதலில் தோன்றி மாமன்னர் முதலாம் ராஜேந்திர சோழனால் பூஜிக்கப்பட்ட இந்த அழகிய ஞான சரஸ்வதியின் வலது முன் கை பின்னமடைந்துள்ளது மிகவும் வருத்தத்திற்குரியது.

Koviloor Digital Library

சோழர் ஆட்சியில் திருவாரூரில் இருந்து 19 கி.மீ. தொலைவில் பூந்தோட்டம் அருகே உள்ள இன்று கூத்தனூர் என்று அழைக்கப்பட்டு வரும் கிராமத்தை இரண்டாம் ராஜராஜ சோழன் ஒட்டக் கூத்தருக்கு அவருடைய கவித்திறமைக்கு அன்பளிப் பாகக் கொடுத்தான். அன்றிலிருந்து அவ்வூர் கூத்தனூர் என்று அழைக்கப்பட்டு வந்து ஒட்டக்கூத்தர் இங்கு மகா சரஸ்வதி கோயிலை கட்டினார் என்பது வரலாறு.

கூத்தனூர் தலவரலாறு

பிரம்மனும், சரஸ்வதியும் சத்தியலோகத்தில் வாழ்ந்து தேவர்களுக்கு அருள்பாலித்து வந்தனர். அப்போது கலைவாணி, "இந்த சத்தியலோகமே, கல்விக்கரசியான தன்னால் தான் பெருமையடைகிறது" என்றாள். பிரம்மதேவா, தான் படைக்கும் தொழிலைச் செய்வதால் தான் பெருமையடைகிறது என்றும், தனது துணைவி என்பதாலேயே சரஸ்வதி பெருமை யடைகிறாள் என்றும் சொன்னார். இருவருக்கும் இதுகுறித்து வாதம் ஏற்பட்டது. இது பெரும் பிரச்னையாகி பிரம்மனும், சரஸ்வதியும் ஒருவரையொருவர் சபித்துக் கொண்டனர். இதனால் இருவரும் பூலோகத்தில் சோழநாட்டில் புண்ணிய கீர்த்தி, சோபனை என்னும் அந்தண தம்பதியினருக்கு பகுகாந்தன் என்ற மகனாகவும், சிரத்தை என்ற மகளாகவும் அவதரித்தனர். இவர்களுக்கு திருமண வயது வந்ததும் பெற்றோர்கள் இவர்களுக்கேற்ற வரன் தேடினர். அப்போது இவர்கள் இருவருக்கும் தாங்கள் யார் என்பது நினைவுக்கு வந்தது.

சகோதர நிலையிலுள்ள தாங்கள் திருமணம் செய்து கொண்டால் உலகம் பழிக்குமே என அஞ்சினர். தம்பதிகள் ஒற்றுமையாக இல்லாவிட்டால், இப்படிப் பட்ட இக்கட்டான சூழ்நிலைகளைச் சந்திக்க நேரிடும் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டவே

Koviloor Digital Library

இப்படி ஒரு நாடகத்தை உலகத்தின் முன்னால் அவர்கள் நடத்திக் காட்டினர். பெற்றோருக்கு இவ் விஷயம் தெரியவந்தது. அவர்களை சமாதானம் செய்யும் விதத்தில், சிவனை நினைத்து உள்ளம் உருகி பிரார்த்தனை செய்தனர். சிவபெருமான் அவள் முன்தோன்றி, இப்பிறவியில் சகோதரர்களாக அவதரித்த நீங்கள், திருமணம் செய்வதென்பது இயலாத காரியம். எனவே, நீ மட்டும் இங்கே தனியாக கோயில் கொண்டிருந்து இங்கு வரும் பக்தர்களுக்கு கல்விச் செல்வத்தை வழங்கு" என்று அருள் பாலித்தார். அதன்படி கன்னி சரஸ்வதியாக இக்கோயிலில் இவள் அருள்பாலிக்கிறாள்.

தமிழகத்தில் சரஸ்வதிக்கென மிகப்பெரிய தனிக் கோயில் கூத்தனூரில் மட்டுமே. பிரம்மாவுக்கு அதிகமாக கோயில்கள் அமையாததால் அவரது மனைவியான சரஸ்வதிக்கும் இந்தியாவில் அதிக கோயில்கள் அமையாதது இயற்கையே. கூத்தனூர் சரஸ்வதி கோயிலிலும் பிரம்மாவுக்கு சிலை இல்லை. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள இக்கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது.

கூத்தனூரில் உள்ள கோயிலிலும் மகா ஞான சரஸ்வதி வெண்மை நிற ஆடைதரித்து வெண்தாமரையில் பத்மாசனத்தில் வீற்றிருக்கிறாள். வலதுகையில் சின் முத்திரையும் இடக் கையில் புத்தகமும் வலது மேல் கையில் அட்சரமாலையும், இடதுமேல் கையில் அமிர்த கலசமும் தாங்கியிருக்கிறாள். ஜடாமுடியும், கருணைபுரியும் இருவிழிகளும் "ஞானச்சஸ்" என்ற மூன்றாவது திருக்கண்ணும் கொண்டு கிழக்கு நோக்கி அருள்பாலிக்கிறாள்.

இவ்விரண்டு கோயில்களுக்கு பின்னரே மற்ற சில கோயில்களில் ஞான சரஸ்வதி சன்னிதானங்கள் ஏற்பட்டது. நம் மாத்தூர் கோயிலிலும் இதேபோன்ற

Koviloor Digital Library

சிலையை வடிவமைத்து இப்பொழுது பிரதிஷ்ட்டை செய்துள்ளதில் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இந்த அரியதொரு சந்தர்ப்பத்தை எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் தந்த நிர்வாகக்குழு, செயற்குழு, பொதுக்குழு, கும்பாபிஷேக குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் எங்களுக்குப் பெரிதும் உதவிய சிறுகூடல்பட்டி டாக்டர் M. பழனியப்பன் அவர்களுக்கும், நானும் எனது மனைவி அன்னபூரணி மகள் ரத்னா, மகன் பாலசுந்தரம் எங்களுடைய வணக்கத்தையும் உளம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.



என்றும் வேண்டும் இவ்வன்பு
இறைப்பணியில்,

S. சுப்புசுந்தரம் - வலையபட்டி
அன்னம் அசோசியேட்ஸ்
21(11), பெரியண்ண மேஸ்திரி தெரு,
பெரியமெட், சென்னை - 600 003.
அலைபேசி: 98844 22112

Koviloor Digital Library

ஸ்ரீ ஞான சரஸ்வதி

ஸ்ரீ சரஸ்வதி தேவியை கலைவாணி என்றும் ஞான சரஸ்வதி என்றும் அவர்களுடைய சில பாவனை மாற்றங்களுக்கு ஏற்ப அழைக்கப்படுகிறது. பொதுவாக நாம் புகைப் படங்களிலும் பல கோயில்களிலும் அதிகமாக பார்ப்பது வீணையுடன் காட்சி அளிக்கும் கலைவாணி எனப்படும் சரஸ்வதி தேவியைத்தான்.

பண்டைக்கால கோயில்களில் ஒரு சிலவற்றில் மட்டுமே ஞான சரஸ்வதியின் சன்னிதானத்தைக் காணலாம். ஞான சரஸ்வதியின் மற்றொரு பெயர் "வாக்தேவி" ஆகும். நாம் பேச நாவில் வாக்கு வரம் அருளிய தேவியை வாக்தேவி என்றும் பின்னாளில் ஞானசரஸ்வதி என்றும் மக்களால் வணங்கி வரப்படுகிறாள். கல்வி இயல், இசை, நாட்டியம் பயிலத் துவங்கும் குழந்தைகள், படிக்கும் மாணவர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் கலைத்துறையில் இருப்பவர்கள் ஞான சரஸ்வதியை வணங்கி வழிபட்டால் தேவியின் அருளால் அனைத்துத்திறனும், ஞானமும் அறிவும் மேலும் மேலும் வளர்ச்சி அடைந்து சிறந்து புகழ்பெற்று விளங்குவர்.

பௌர்ணமி நாளில் கல்வி பயிலத் துவங்கும் பிள்ளைகளின் நாவில் தேனில் நனைத்த பழத்தினால் "ஓம்" என்று எழுதி மகா ஞான சரஸ்வதியை பூஜித்து வணங்கினால் பின்னாளில் அவர்களுடைய துறையில் சிறந்து விளங்குவர்.

சமஸ்கிருதத்தில் சர என்றால் சரத்து, ஸ்வதி என்றால் "தான்" ஆக சரஸ்வதி என்றால் தன்னுடைய சரத்து என்று பொருள். கூத்தனூரில் உள்ள ஞான சரஸ்வதியைப் போல அதே வடிவமைப்புடன் நம் மாத்தூர் கோயிலிலும் வெண்தாமரையில் பத்மாசனத்தில் வலதுகைசின் முத்திரையும், இடக்கையில் புத்தகமும், வலதுமேல் கையில் அட்சர மாலையும், இடது மேல் கையில் அமிர்த கலசமும், ஜடாமுடியும், கருணைபுரியும் இரு விழிகளுடன் அமர்ந்திருக்கும் ஞான சரஸ்வதியை பிரத்திஷ்டை செய்துள்ளோம் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். அனைவரும் வணங்கி அருள் பெறுவீராக!

சிவாலயத்தில் மேற்கு பிரகாரத்தில் உட்கார்ந்த நிலையில் கிழக்கு நோக்கி அமர்ந்திருப்பாள்.

சரஸ்வதி தியானம்

**ஸரஸ்வதீபம் சதுர்ஹஸ்தாம்
ஸ்வேதபத்மாஸநஸ்த்திதாம்
ஜடாமகுடசம்யுக்தாம்
சுக்லவர்ணசிதாம்பர
யக்நோப வீதசம்யுக்தா
முக்தஹாரசுலோசனா
வ்யாக்யானசாக்ஷ சூத்ரம்ச
தக்ஷிணெசு கரத்வயே
புஸ்த்தகம்குண்டிகம்சாபி
த்ரிணெத்ரம் சாரூருபிணி
ரிய்கஜு: ஸ்யா பிஸ்த்தேன
முனிபி: சேவிதா வரா.**

ஸ்ரீ ஞான சரஸ்வதி

நான்கு கைகளும்
பத்மாசனத்தில் மீது அமர்ந்தவளும்
ஜடா மகுடத்தை தரித்தவளும்
வெண்மையான ஆடையைத் தரித்தவளும்
யக் ஞோய வீதத்தை தரித்தவளும்
முத்துக்களினால் ஆபரணங்களை உடையவளும்
அக்ஷ மாலையை வலது மேற்கையிலும்
இடது மேற் கையில் இடது கண்டியையும்
வலது கீழ்க்கையில் சின்முத்தையும்
இடது கீழ்க்கையில் புஸ்த்தகமும்
உடையவளான வாக்தேவி எனப்படும்
ஞான சரஸ்வதியை வணங்குகிறேன்.

ஞான சரஸ்வதி

கல்விக்கடலே கருணைமிகு சரஸ்வதியே
கலைஞான தெய்வமே காருண்ய ரூபமே
வீணையின் நாதத்தால் ஞானத்தைதரும் தேவியே
வெண்மைநிற பத்மத்தில் வீற்றிருக்கும் தேவியே
ப்ரம்மாவின் பத்தினியே பெருமாளின் மருமகளே
மறைநான்கும் அறிந்த மாசற்ற தேவியே
நீயும் மாத்தூர் கோவிலிலே வந்தமர்ந்த
சரஸ்வதியே
கல்கோவில் கொண்டவளே கலைஞான
மாணிக்கமே
எந்நாளும் வணங்குகின்ற ஏற்றமிகு மக்களுக்கு
நல்லருள் நல்கியே ஞானத்தை தந்திடுவாய்

Koviloor Digital Library

சகலகலாவல்லி மாலை

என்னும்

சரஸ்வதி தோத்திரம்

(கலைமகள் புகழ்மாலை)

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்க என வெள்ளையுள்ளத்
தண்டா மரக்குத் தகாதுகொ
லோசககம் ஏழுமளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்பித்
தாக உண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே

நாடு பொருட் சுவை சொற்சுவை
தோயத் தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கணதனக் குன்றும ஐம்பாற்
காடும் சுமக்கும கரும்பே
சகல கலா வல்லியே

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோஉளாங் கொண்டு தெள்ளித்
தேளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கொண்டு
களிங்குங் கலாப மயிலே
சகல கலா வல்லியே

Koviloor Digital Library

தாக்கும் பனுவல் துறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வாட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலா வல்லியே

பஞ்சப் பிதந்தரு செய்ய பொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேடுநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவசம் உயர்த் தோன்செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலா வல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி செய்த நல்
காய் எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலும் அன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும என் பாற்
காட்டும் படி நின் கடைக் கண் நல்
காய் உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம் பால்
அமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள் ளோதிமப் பேடே
சகல கலா வல்லியே

செல்விற் பனமும் அவதான
முங்கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையுந்தந் தடிமை கொள்
வாய்நளி சைனஞ் சேர்
செல்விக் கரிதென் றெருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலா வல்லியே

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார் நிலந் தோய்ப் புழுக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாண நடை
கற்கும் பதாம் புயத் தாளே
சகல கலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும் என்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாபடைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல கோடியுன்
டேனும் விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலா வல்லியே.

திருமகள் வணக்கம்

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள் வணிகர் - வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா! இலக்குமியே,
என்றைக்கும் நீங்கா திரு.

Koviloor Digital Library

நீங்காது நின்மகனும் நெடிய திருமாலும்
பாங்காக அன்று வந்த பாற்கடல்போல் – தேங்காமல்
நன்றாக நீ இருந்து நாளும் வளம் பெருகி,
என்றைக்கும் நீங்கா திரு.

நின்மேலுமாணை நின்மகள் மேலுமாணை,
நின்மாக்கொழுநன்,
தன்மேலுமானை தமிழ்மேலுமாணை தன வணிகச்
சின்னஞ் சிறுவர் தெரியாத காளையர் என் செயினும்
பின்னும் பொறுத்திருப்பாய் பெரிய இலக்குமியே!

– பாடுவார் முத்தப்ப செட்டியார்

நகரத்தாரின் பெருமை

உலகமெலாம் நகரத்தார் செய்த சேவை
உயர்கோயில் எழுப்பியது மட்டும் அன்று
இலகுதமிழ் மென்மேலும் ஓங்கச் செய்தார்
இணையிலாக் கல்விக்கே அடிக்கல்லானார்
மலையளவு பொருள்தந்தார் அறத்தைக் காக்க
மக்களைப்போல் கடவுளுக்கும் பங்கு வைத்தார்
நிலையுயர்ந்து நின்றவர்கள் இன்று தாழ்ந்தார்
நேரத்தால் மறுபடியும் எழுந்து நிற்பார்
காளத்தி தன்னிலவர் அறம் தொடங்கி
கன்னியா குமரிவரை தொடர்ந்து செல்லும்
நாளெத் தனைசென்ற போதும் அன்னார்
நற்பெயரை மனிதகுலம் புகழ்ந்து பாடும்
தாளத்தில் தவறாமல் நடனம் ஆடி
தனைகாத்துத் தாய்காக்கும் நகரத் தார்கள்
நீள்சுற்றம் எந்நாளும் நிறைந்து வாழ
நீயுருள்வாய் மீனாட்சி நெஞ்சத் தாயே!

– கவியரசர் கண்ணதாசன்

சிறப்புமிகு மாத்தூர்

ஒன்பது நகரக் கோயில்களுள் ஒன்று மாத்தூர் ஆகும். இவ்வூர் சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடி யிலிருந்து 7 கி.மீ. தூரத்தில் உள்ளது. இலுப்பைக்குடிச் சாலை வழியாக இவ்வூருக்குச் செல்லலாம்.

மாத்தூரின் மற்றொரு பெயர் வீர பாண்டியபுரம், பாண்டிய நாட்டை ஆண்ட பிற்காலப் பாண்டிய மன்னன் உருவாக்கிய ஊர் இது என்பதை இக்காரணப் பெயர் உணர்த்துகிறது. இப்பாண்டிய மன்னன் 12 - ஆம் நூற்றாண்டில் அரசாட்சி செய்தவன்.

இவ்வூர், பிரம்புகள் அதிகம் விளைந்த பிரம்பூர் நாட்டில் அமைந்திருந்தது. கேரள மன்னரான சேர மன்னருக்குச் சிம்ம சொப்பனமாக - பயம் ஏற்படுத்தும் வீரனாக விளங்கிய வீரபாண்டியனின் வளம்மிக்க நாடு என்பதையே "கேரள சிங்க வளநாடு" என்று திருமணத்தின் போது எழுதுவது உணர்த்துகிறது. இக் கோயில் கி.பி. 712 - ஆம் ஆண்டில் முற்காலப் பாண்டிய மன்னரால் நகரத்தாருக்கு அளிக்கப்பெற்றது.

மாத்தூர்க் கோயிலில் ஏழு உட்பிரிவுகள் உள்ளன. அவையாவன:

1. உறையூருடையார் 2. அரும்பாக்கூருடையார் 3. மணலூருடையார் 4. மண்ணூருடையார் 5. கண்ணூருடையார் 6. கருப்பூருடையார் 7. குளத்தூருடையார்.

இக்கோயிலின் மொத்தப் புள்ளிகள் சுமார் 8810. இளையாத்தங்குடிக் கோயிலார் தம் ஏழு பிரிவுகளுக்குள் கொள்வினை கொடுப்பினை முறைகளை வைத்துக் கொண்டுள்ளதைப் போலவே, மாத்தூர்க் கோயிலிலும் இப் பிரிவுகளுக்குள் திருமணம் செய்து கொள்ளும் முறை உள்ளது.

Koviloor Digital Library

மாத்தூர் பெயர்க் காரணம்

கி.பி. 4ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கொங்கணச் சித்தர் என்னும் முனிவர் தவம் செய்யும்போது, தாமிரத்தைத் தங்கமாக்கும் ரசவாதக் கலையைச் சோதனை செய்து பார்த்தார். முதலில் ஒன்பது உலோகங் களையும், சூதம், லிங்கம், அரிதாரம் முதலியவற்றையும் கலந்து இரசவாதம் செய்து, அதில் தாமிரத்தைச் சேர்த்துத் தங்கத்தை தயாரித்தார். இச் சோதனையினால் அவர் 16 மாற்றுத் தங்கத்தைத் தயாரித்தார். பின்னர் மாத்தூரில் உள்ள கரிமேட்டுப் புன்செய் என்னும் காட்டில், விளாரி என்னும் பச்சிலையிலிருந்து சாற்றினைப் பிழிந்து எடுத்து உலோகங்களுடன் கலந்து நெருப்பிலிட்டுக் காய்ச்சியதால் 500 மாற்றுத் தங்க்த்தை உருவாக்கினார்.

தவமுனிவர், ஆசைகளைத் துறந்து, மக்களுக்கு நிம்மதியான நல்வழியைக் காட்டாமல், பேராசை வயப்பட்டுத் தங்கம் தயாரிக்கத் தொடங்கியதை அறிந்த இறைவன், அவரைத் தடுத்தாட்கொள்ள நினைத்தார். பிட்சாடனர் உருவில் வந்தார்.

கொங்கணச் சித்தர் தண்ணீர்த் தாகத்தால் விக்கிய படி கோயில் வாசலுக்கு வந்து "தண்ணீர்! தண்ணீர்!" என்று கேட்டார்.

பிட்சாடனர் உருவில் வந்த சிவபெருமான், அவருக்குத் தண்ணீரைக் கொடுத்துக் குடிக்கச் செய்து விட்டு, அவரது பேராசை விளையும் சோதனைக் கூடத்திலிருந்த தங்கக் குடுவைகளையும், ரசவாத மருந்துகளையும் காலால் தள்ளிவிட்டு மறைந்தார். அப்போதுதான் கொங்கண மகரிஷிக்கு ஞானோதயம் ஏற்பட்டது.

'இவ்வளவு தங்கம் இருந்தும், அது ஒரு சாதாரண தண்ணீர் தாகத்தைக் கூடத் தீர்க்க முடியவில்லையே! இது தேவைதானா?' என யோசித்தார். அழியும்

தங்கத்தை விட, அழியாத நிம்மதிப் பேற்றினைத் தரும் இறைவனை வழிபடுவதே சாலச் சிறந்தது என முடிவெடுத்து உண்மையான தவயோகியானார்.

500 மாற்று வரை தங்கம் தயாரித்த ஊர் என்பதனால், இதனை மாற்றூர் என்று முன்பு அழைத்தனர். பின்னர் காலப் போக்கில் மாத்தூர் என மருவி வழங்கி வருகிறது. மாற்றூர் என்பதே இவ்வூரின் மிகப் பழைய பெயராகும். இப்புராணக் கதை செவிவழிச் செய்தியாக இன்றும் கூறப்படுகிறது. இச்செய்திக்கு இன்றும் சான்றாக அமைந்திருப்பது இக்கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் உள்ள பிட்சாடனாரின் திரு உருவச் சிற்பம். இச்சிற்பம் மாத்தூர் தலபுராணத்திற்கு ஒரு சரியான சான்றாக அமைந்துள்ளது.

கலங்காத கண்ட விநாயகர்

மாத்தூர்க் கோயிலில் உள்ள கமலாலய ஊருணிக் கரையில் உள்ள விநாயகரின் பெயர் கலங்காத கண்ட விநாயகர் ஆகும். மாத்தூர்க் கோயில் நகரத்தார்களில் பலர், கடல் வணிகம் செய்தவர்கள். நானாதேசிகன் என்றால் பல்வேறு தேசங்களுக்கும் சென்று வரும் வணிகர்கள் என்றே பொருள். கலங்காத கண்டம் என்றால் பயமறியாத கழுத்து எனப் பொருள். பயம் அதிகமானால், கழுத்தில் உள்ள நரம்புகள் துடிதுடிக்கும். பேச முடியாது. எதுவும் செய்ய முடியாது. அப்படிப்பட்ட பய உணர்ச்சிகளை வென்று சாதனை படைப்பதற்கு உதவுவதனால், அவ்விநாயகரைக் கலங்காத கண்ட விநாயகர் என்றனர்.

அருள்மிகு ஐந்நூற்றீஸ்வரர்

நகரத்தார்கள் முன்பு கட்டு மரங்கள் மூலமும், பிறகு கப்பல் மூலமும், கடல் வணிகம் செய்துள்ளனர். கூட்டம் கூட்டமாகக் கடல் பயணம் செய்து வந்தனர்.

ஒரு கூட்டத்தில் ஐநூறு பேர் சென்றதனால், இவர்களைத் "திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்" என அழைக்கப்பட்டனர். இந்த ஐந்நூற்றுவர் வணங்கிய தெய்வமே, ஐநூற்றீஸ்வரர் எனப் பெயர் பெற்றது.

அருள்மிகு பெரியநாயகி அம்மன்

பிற அம்மன் சிற்பங்களில் தலைப்பகுதி நேராக நிமிர்ந்த தோற்றத்தில் அமைந்திருக்கும். ஆனால் பெரியநாயகி அம்மனின் திருமுகம், நாடி வந்தோரின் விருப்பத்தை உடனே நிறைவேற்றுவது போல - சற்றே முகம் சாய்த்து அமைந்திருக்கிறது.

தாமரை மலர்ப் பீடத்தின் மீது இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் அம்மன் காட்சி தருகின்றார்.

உயர்வு மிகு நந்தி

மாத்தூர்க் கோயிலின் தனிச் சிறப்புகளுள் ஒன்றாகத் திகழ்வது நந்தியின் சிம்மபீடமாகும். நான்கு சிங்கங்கள் நான்கு திசைகளை நோக்கி அமர்ந்துள்ளன. அவற்றின் தலைமீது ஒரு கல்பீடம் அமைந்துள்ளது. அதன்மீது நந்தியின் சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நந்திக்குச் சிம்மபீடம் தந்து சிறப்பித்துள்ளனர். இங்குள்ள நந்தியை மாப்பிள்ளை நந்தி என்றும் அழைக்கப்படுவது உண்டு.

ஆனந்த முனீஸ்வரர்

முனிவர்கள் பலரும் போற்றி வணங்கிய ஈஸ்வரனை முனீஸ்வரன் என்பர். அதிகமான கோபத்துடன் உக்கிர வடிவம் கொண்ட ஈஸ்வரன் என்ற பொருளிலும் முனீஸ்வரன் என்பார்கள். இம் முனீஸ்வரருக்கான பீடத்தை மட்டும் கோயிலின் வெளிப் பிரகாரத்தில் அமைப்பது மரபாக உள்ளது. ஆனால் உள் பிரகாரத்திலேயே தல விருட்சத்தின் கீழ் முனீஸ்வரர் மாத்தூரில் வழிபடப் பெறுகின்றார்.

Koviloor Digital Library

32195

ஒன்பது நகரக் கோவில்களின் முகவரிகள்

அருள்மிகு கைலாசநாதர் – நித்தியகல்யாணி கோயில்,
இளையாற்றங்குடி - 630 205,
கீழச்சிவல்பட்டி வழி, போன்: 04577 - 265221.

அருள்மிகு ஐநூற்றீஸ்வரர் – பெரியநாயகி கோயில்,
மாத்தூர் - 630202, அரியக்குடி வழி,
போன் : 04565 - 231862

அருள்மிகு வளரொளிநாதர் – வடிவுடையம்மை கோயில்,
வயிரவன்பட்டி - 630 215, சிறுகூடல்பட்டி வழி.
போன் : 04577 - 264237

அருள்மிகு ஆட்கொண்டநாத சுவாமி – சிவபுரந்தேவி கோயில்,
இரணியூர் - 630 205, கீழச்சிவல்பட்டி வழி,
போன் : 04577 - 265645

அருள்மிகு கற்பக விநாயகர் – திருவீசர் –சிவகாமவல்லி கோயில்,
பிள்ளையார்பட்டி - 630 207.
போன்: 04577 - 264240/41

அருள்மிகு ஜெயங்கொண்ட சோழீஸ்வரர் – சவுந்தரநாயகி கோயில்,
நேமம் - 630 206, குன்றக்குடி வழி,
போன்: 04577 - 264190

அருள்மிகு சுயம்பிரகாசேஸ்வரர் – சவுந்தரநாயகி கோயில்,
இலுப்பக்குடி - 630 202
போன்: 04565 - 221810/230653

அருள்மிகு தேசிகநாதசுவாமி – ஆவுடைநாயகி கோயில்,
பூவாண்டிப்பட்டி (எ) நகரச்சூரக்குடி - 630 102,
போன்: 04565 - 281575

அருள்மிகு சண்டிகேசுவர் – காமாட்சியம்மை கோயில்,
வேலங்குடி - 630 106, கோட்டையூர் வழி.

துன்பத்தை சகித்துக் கொள்ளும் மனிதனே
இன்பத்தை அனுபவிக்க தகுதியானவன்.